1981 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 5—முத்திரை தாள்கள்—நிர்வாகம்; ஆகிய மானியக் கோரிக்கைகள் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்30ஆம் நாளன்று ஏற்கனவே எடுத்துக் கொள்வ தாக அறிவிக்கப் பட்டிருந்த 13—நீதி நிர்வாகம் 14—சிறைச் சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளுக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப் பெறும்.

அன்று வினாக்கள்-விடைகள் நேரம் கிடையாது. தேவைப் படின் அன்று (30–4–1981) பேரவை மாலையில் கூடும்.

மற்ற அலுவல்கள் ஏற்கனவே அறிவித்தபடி நடைபெறும்.

4. அறிக்கை அளித்தல்.

விதி 107 (1)-இன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலை வர் அவர்களே, 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண். 225 (பழைய எண் 1454) தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது, உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாவினைக் கேட்டிருந்தார்—

''இந்திய முந்திரிக் கழகம் விநியோகிக்கிற கச்சா முந்திரியை ஒழுங்காக உபயோகப்படுத்தவில்லை என்று புகார் இருப்பதால் சென்ட்ரல் காஷ்யூ [முந்திரி] கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாக முந்திரியை மாநில அரசு பெற்று கேரளா மாநிலத்தில் செய்வது போல ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தி அந்த நிறுவனத் தின் வழியாக அந்த முந்திரியை ஆலைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

இதற்கு—

''மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரி தொழில் வளர்ச்சி, முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்க

மாக க்கொண்டு ஒரு முந்திரி வாரியம் அமைக்க செயற் குறிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி அது மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது ''.

என்பதற்குப் பதிலாக, கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்க விரும்புகிறேன்.

'' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரி தொழில் வளர்ச்சி, முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்க மாகக் கொண்டு, ஒரு முந்திரி வாரியம் அமைக்கும் செயற் குறிப்பு மத்திய அரசின் ஆய்வில் உள்ளது. இச்செயற் குறிப்பின் மீது இம்மாநில அரசின் கருத்துக்களை மைய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது ''.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர் சாமி, இரா. கருப்பையா, து. புருஷோத்தமன், அ. ரகுமான் கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரு வார்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுதாரர் களுக்கு சர்க்கரை வழங்கப்படுவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்;